# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC No.1173/2023 | Date: 13.02.2026 |
| Deposition of Witness for | : | **பு.சா.1** | |
| Name | : | **வெங்கடாஜலம்** | |

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி** :-

1) நான் திருச்செங்கோட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு திருச்செங்கோடு SBI and KVB ஆகிய கிளையில் கணக்குகள் உள்ளது என்றால் சரிதான். சங்ககிரி ஐசிஐசிஐ வங்கியில் கணக்கு 2023 ம் வருடம் தொடங்கினேன் என்றால் சரியல்ல, 2010 ம் வருடமே தொடங்கிவிட்டேன். எனக்கு திருச்செங்கோட்டில் வங்கி கணக்குகள் உள்ள பட்சத்தில் வழக்கு காசோலையை சங்ககிரியில் உள்ள வங்கி கணக்கில் வசூலுக்கு தாக்கல் செய்ததற்கு ஏதேனும் குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை.

2) நான் எதிரியிடம் பெற்று வைத்த காசோலையை மோசடியாக பூர்த்தி செய்து திருச்செங்கோட்டில் உள்ள வங்கி கிளையில் தாக்கல் செய்தால் என்னை ஏதேனும் கூறுவார்கள் என்பதால், நான் சங்ககிரியில் உள்ள வங்கி கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை என்னிடம் எத்தனை வருடங்களாக உள்ளது என்றால் நான் எதிரிக்கு கடன் கொடுத்த தேதியில் இருந்து உள்ளது. வழக்கு காசோலையில் எந்த நிற மையினால் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. மேற்படி, காசோலையில் உள்ள விவரங்கள் எந்த நிற மையினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை.

3) புகாரில் எதிரி என்னிடம் ஓட்டுநராக பணியாற்றியதாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். அந்த வகையில் தான் எதிரி பழக்கம் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். எதிரிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை யார் பெற்றுக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் எனது வழக்கறிஞர் அனுப்பியிருப்பார். வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விவரத்தை யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் 10 ம் மாதம் 2023 ம் வருடம் என்று நினைக்கிறேன், தேதி சரியாக தெரியவில்லை.

4) எதிரி எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எதிரி எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டார் என்பது தெரியாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து பதில் அறிவிப்பு ஏதேனும் வந்ததா என்றால் வந்தது, பொய்யான சங்கதிகளை கூறி வந்தது. பதில் அறிவிப்பு ஆங்கிலத்தில் இருந்ததால் அதை எனது வழக்கறிஞரிடம் கொடுத்து அதில் உள்ள சங்கதிகளை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன், முழுமையாக தெரிந்துகொள்ளவில்லை.

5) பதில் அறிவிப்புக்கு மறுப்பு தெரிவித்து மறு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன். பொய்யான சங்கதிகள் என்னென்ன என்று என்னால் கூறமுடியுமா என்றால் என்னிடம் பணம் பெற்றதை மறுத்து அனுப்பியிருந்தார். வேறு எதுவும் குறிப்பிட்டு சொல்லியிருந்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனக்கு துணையாக எப்போதும் எனது மகன்

உடன் வருவார் என்றால் சரிதான், நான் உடல்நிலை சரியில்லாமல் உள்ளதால் உடன் பாதுகாப்பிற்காக வருவார். தற்போதும், நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான்.

6) எனது மகன் என்ன படித்துள்ளார் என்றால் B.E., படித்துள்ளார். அவருக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் புகார், பிரமாண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றை தமிழில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. பதில் அறிவிப்பு எனது முகவரிக்கும் வந்தது என்றால் சரிதான். எதிரி எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் நான் எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகள் தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) எனக்கு எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானம் உள்ளது என்பதை நிரூபிக்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பதில் அறிவிப்பில் 2021ம் வருடம் எனக்கும், எதிரிக்கும் பணம் கொடுக்கல்/வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்த விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். அந்த முன்விரோதத்தினால் தான் இந்த வழக்கு காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்று பதில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறான சங்கதி ஆகும்.

8) பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகளை மறுத்து புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் பதில்

அறிவிப்பை மறுத்து வழக்கில் குறிப்பிடாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரி என்மீது 2018ம் வருடம் நாமக்கல் காவல் கண்காணிப்பாளரிடம் அளித்த புகாரில் என்னிடம் பெற்ற ரூ.5,00,000/-த்தை எனது மகனின் வங்கி கணக்கிற்கும், என்னிடம் ரொக்கமாகவும் கொடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை.

9) நான் ஒவ்வொரு கேள்விக்கும் அது பற்றி எனக்கு தெரியாது என்றும், ஞாபகமில்லை என்று கூறுவதால் இந்த வழக்கு பொய் வழக்கு என்பதாக தெரியவருகிறது என்றால் சரியல்ல. எதிரி என்மீது காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் நான் ஆஜரானேன் என்றால் சரிதான். மேற்படி, புகாரில் நான் எழுத்துபூர்வமாக எனது வாக்குமூலத்தை எழுதி கொடுத்தேன் என்றால் இல்லை. நான் எழுத்துபூர்வமாக எனது வாக்குமூலத்தை எழுதி கொடுத்தேன் என்றும், தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் Deposition ல் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை **(சாட்சி மீண்டும் பார்த்துவிட்டு தன்னுடையதுதான் என்று சாட்சியம் அளித்தார், கண்ணாடி போடாததால் எனக்கு சரியாக தெரியவில்லை என்று கூறினார்).**

10) நான் காவல் நிலையத்தில் ஆஜராகி எழுதி கொடுத்துவிட்டு அதில் கையொப்பம் செய்துவிட்டு, தற்போது கையொப்பம் என்னுடையது அல்ல என்று முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலையில் எனது பெயர் எங்குள்ளது என்றால் மேலே எழுதப்பட்டுள்ளது. நான் காவல் நிலையத்தில் ஆஜராகி எழுதி கொடுத்த

ஆவணத்தில் நான் எதிரியிடம் எந்த காசோலையும் பெறவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் எழுதி கொடுக்கவில்லை, விசாரணையில் நான் காசோலை பெறவில்லை என்று வாய்மொழியாக கூறினேன். நான் காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜரான பிறகு எதிரி என்னிடம் பெற்ற தொகையை திருப்பி கொடுக்கவில்லை என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

11) எதிரி மார்ச் மாதம் 2021ம் வருடம் பணத்தை திருப்பி செலுத்திவிட்டதாக முந்தைய குறுக்கு விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் ஆனால், கடந்த 11-08-2021ம் தேதி காவல் நிலையத்தில் எதிரி புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். நான் சொன்னாவறு எதிரி மார்ச் மாதத்தில் பணத்தை திருப்பி செலுத்தியிருந்தால் கடந்த 11-08-2021ம் தேதி காவல் நிலையத்தில் எதிரி என்மீது புகார் அளித்திருக்க மாட்டார் என்றால் சரியல்ல, மன வருத்தத்தின் காரணமாக எதிரி என்மீது புகார் அளித்திருப்பார். நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12) எதிரி கொடுத்த காவல் புகாரில் எதிரியின் இரண்டு ஆக்ஸிஸ் வங்கி காசோலைகள் என்னிடம் இருப்பதாக குறிப்பிட்டார் என்றும், இந்த வழக்கு காசோலையும் ஆக்ஸிஸ் வங்கி காசோலை தான் என்றும், காவல் நிலையத்தில் குறிப்பிட்டுள்ள புகாரில் காசோலையை பயன்படுத்தி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2021ம் வருடத்திற்கு பின்னிட்டு நானும், எதிரியும் சுமூகமான உறவில் தான் இருந்தோம் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் எனது அலைபேசியின் பதிவுகளை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை.

13) எனக்கும், எதிரிக்கும் சுமூகமான உறவு இல்லை என்பதால் தான் நான் நீதிமன்றத்தில் அலைபேசியின் பதிவுகளை தாக்கல் செய்ய மறுக்கிறேன் என்றால் சரியல்ல, நான் அலைபேசியின் மூலம் எதிரியுடன் அதிகமாக பேசிக்கொண்டதில்லை, நேரில் தான் பேசியிருக்கிறேன். வழக்கு காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்து திருப்பப்பட்டது என்ற விவரத்தை நான் எதிரிக்கு எவ்வாறு தெரிவித்தேன் என்றால் எதிரியின் வீட்டிற்கு சென்று சொன்னேன். எதிரியின் வீடு எந்த பக்கம் பார்த்த வாசல்படி என்றால் கிழக்கு வாசல்படி என்று நினைக்கிறேன். நான் சொன்னவாறு நேரில் சென்றிருந்தால் எனக்கு திசை சரியாக தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல, திசைகள் எனக்கு சரியாக தெரியவில்லை.

14) உண்மையிலேயே, எதிரியின் வீட்டின் வாசல்படி வடக்கு திசை என்றும், நான் அவர் வீட்டிற்கு செல்லாததால் தான் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது மனைவியையும், எனது மகனையும் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தேவையில்லை. எனது மகனை விசாரித்தால் எதிரி, எனது மகனின் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பிய விவரம் தெரியவந்துவிடும் என்பதால் விசாரிக்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

15) எனக்கும், எதிரிக்கும் இடையே 2018ம் வருடத்தில் நடந்த பணபரிவர்த்தனையின்போது பிணையமாக கொடுத்த வழக்கு காசோலையை வைத்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை 2018ம் வருடத்தில் நடந்த பணபரித்தனைக்காக கொடுக்கப்பட்ட காசோலை என்பதை நிரூபிக்க காவல் நிலையத்தில் எழுதி கொடுத்த ஆவணத்தை

எதிரி தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கு பொய் வழக்கு என்பதால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Venkatachalam

Judicial Magistrate No.1,

Sankari.